நீதியில் நிலைத்திருந்து - உம்
திருமுகம் நான் காண்பேன்
உயிர்த்தெழும் போது - உம்
சாயலால் திருப்தியாவேன் (2)

நீதியில்......

தேவனே நீர் என் தேவன்
அதிகாலமே தேடி வந்தேன் -(2)
நீரின்றி வரண்ட நிலம்போல்
ஏங்குகிறேன் தினம் உமக்காய் -(2)
அல்லேலூயா ஓசன்னா -(4)

நீதியில்......

ஜீவனை விட உம் அன்பு
அது எத்தனை நல்லது -(2)
புகழ்ந்திடுமே என் உதடு
மகிழ்ந்திடுமே என் உள்ளம் -(2)
அல்லேலூயா ஓசன்னா -(4)

நீதியில்......

உயிர் வாழும் நாட்களெல்லாம்
உம் நாமம் சொல்லித் துதிப்பேன் -(2)
அறுசுவை உண்பது போல
திருப்தியாகும் என் ஆன்மா -(2)
அல்லேலூயா ஓசன்னா -(4)

நீதியில்......

படுக்கையில் உம்மை நினைப்பேன்
இராச்சாமத்தில் தியானம் செய்வேன் -(2)
துணையாளரே உம் நிழலை
தொடர்ந்து நடந்து வளர்வேன் -(2)
அல்லேலூயா ஓசன்னா -(4)

நீதியில்......

meenumaxx.com